# நாட்டுப்புறக் கலைகளில் பறையிசையின் வெளிப்பாடுகள்

# Manifestations of Paraiyisai in Folk Arts

***முனைவர் சீமான் இளையராஜா***
உதவிப் பேராசிரியர்
நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**Dr. Seeman Ilayaraja**
*Assistant Profesor*
*Department of Floklore*
*University of Tamil University, Thanjavur*

## ஆய்வுச் சுருக்கம்

*பறையிசை என்பது இன்று உலகம் முழுவதும் ஆடப்பட்டுவரும் மிகச் சிறந்த நாட்டுப்புறக் கலையாகும். இது மக்கள் வாழ்வியலில் தவிர்க்க முடியாத ஒரு கலையாக இருந்துவருகின்றது. பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் தவிர்க்க முடியாத கலையாக வளர்ந்து வருகின்றது. கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டின் பெரிய கோயில்களிலிருந்து சிறிய கோயில்கள் வரை இறை வழிபாட்டில் பறையிசைக் கருவியை ஒலி எழுப்பி இறை வழிபாடு செய்துள்ளனர். இதற்கான ஆதாரங்கள் கல்வெட்டுகளிலிருந்தும், இலக்கியங்களிலிருந்தும் கிடைத்திருக்கின்றன.*

***முக்கியச்சொற்கள்:*** *பறையிசை, நாட்டுப்புறக் கலை, இறை வழிபாடு, கல்வெட்டுகள், இலக்கியங்கள்*

## Abstract

*Paraiyisai is one of the finest folk art forms that is being performed all over the world today. It has been an indispensable art in people's lives. It is emerging as an indispensable art form of students in school, college and university-based educational institutions. In the 4th century A.D., from the big temples to the smaller temples in Tamil Nadu, the devotees performed the worship of the deity by making the sound of the paraisai instrument. The evidence for this has been found from inscriptions and literature.*

***Keywords:*** *Paraiyisai, Folk Art, Worship of God, Inscriptions, Literature*

**Citation**

Seeman Ilayaraja. "Manifestations of Paraiyisai in Folk Arts." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 1, 2023, pp. 58–63.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20135476*

**பறையிசை**

*பறையிசை என்பது இன்று உலகம் முழுவதும் ஆடப்பட்டு வரும் மிகச்சிறந்த நாட்டுப்புறக் கலையாகும். இது மக்கள் வாழ்வியலில் தவிர்க்கமுடியாத ஒரு கலையாக இருந்துவருகின்றது. பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் தவிர்க்க முடியாத கலையாக வளர்ந்து வருகின்றது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் பெரிய கோயில்களிலிருந்து சிறிய கோயில்கள் வரை இறைவழிபாட்டில் பறையிசைக் கருவியை ஒலி எழுப்பி இறைவழிபாடு செய்துள்ளனர். இதற்கான ஆதாரங்கள் கல்வெட்டுகளிலிருந்தும், இலக்கியங்களிலிருந்தும் கிடைத்திருக்கின்றன.*

*தமிழ்நாட்டில் இக்கலைகளை உருவாக்கும் படைப்பாளிகளாக, நிகழ்த்தும் கலைஞர்களாக இருப்பது தாழ்த்தப்பட்ட மக்களே என்ற நிலை இருந்தது. தற்போது அது மாற்றம் அடைந்துள்ளது. மனிதனுக்கும், மண்ணுக்கும் இடையிலான உறவை வெளிப்படுத்துவது இக்கலைகள் தான். ஆரம்பகாலத்தில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைப் போன்ற வெகுசன ஊடகங்களிலும், பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக வளாகங்களிலும், மேல்தட்டு அரங்குகள் போன்ற பொது இடங்களிலும் வெறுத்து ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டது. நீண்ட காலமாகவே தீண்டத் தகாதவைகளாக ஓரங்கட்டப்பட்ட இக்கலைகள் இலக்கிய ஏடுகளிலும், வரலாற்றுச் சாசனங்களிலும், தீட்டுப்பட்டு விடும் என்பதால் பதிவு செய்யப்படாமல் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் பன்முக அடக்குமுறைகளையும், தடைகளையும் உடைத்துக் கொண்டு, ஆதிக்கத்தைத் தகர்த்தெறியும் எதிர்ப்புக்குரலாய் பறையிசைக் கலை இன்று எல்லா அரங்குகளிலும் தடம் பதித்து ஓங்கி ஒலித்து வருவது காலத்தின் கட்டாயமாகும்.*

**உழைக்கும் மக்களின் கலை**

*உழைக்கும் மக்கள் தங்களது வாழ்க்கையின் மகிழ்ச்சியை இன்ப துன்ப துயரங்களை, கேலி, கிண்டல், நையாண்டித்தனத்தை, ஆத்திரம் ஆவேசத்தை, வெறுப்பு இறுமாப்பை, சோகம் கோபத்தை, அழுகுணர்வை இன்னும் பல்வேறு விதமான நவரச உணர்வுகளை பறையிசையால் எளிமையாய் ஆட்டம், பாட்டு, கூத்து, நாடகம், விடுகதை, பழமொழி, கதை போன்ற எண்ணற்ற கலைவடிவங்கள் மூலம் அழகியல் தன்மையோடு உயிரோட்டமாய் நம் முன்னோர்கள் நமக்கு படைத்தளித்திருக்கின்றனர். கலை என்பது வெறும் ஆடல் பாடல்கள், மட்டுமல்ல, ஓவியங்களையும் உள்ளடக்கியது. கலைகளின் வழியாக சமத்துவம், சகோதரத்துவம் சுதந்திரம், தன் மானம் போன்றவை வெளிப்படுகின்றன.*

**முதலாளிகளின் கையில் கலைகள்**

*முதலாளிகளின் கையில் நாட்டுப்புறக் கலைகள் வசமாக மாட்டிக்கொண்டது. நாட்டுப் புறக் கலைகளில் உயர் சாதியினர் தங்களுக்கு தேவையான வகையில் இக்கலைகளைப் பின்பற்றி வியபார நோக்கில் கொண்டுச் சென்றுள்ளனர். உழைக்கும் மக்களின் கலைகள் இன்று ஆளும் அதிகார வர்க்கத்தின் சுரண்டலுக்கு அடிமையாகி விட்டது. இக்கலைகள் உழைக்கும் மக்களால், அடித்தட்டு மக்களால் தான் முதன் முதலில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்பது உண்மையான வரலாறு.*

*பண்டைக்காலம் தொட்டே வேத்தியல், பொதுவியல், ஆரியக்கூத்து, தமிழ் கூத்து போன்ற பாகுபாடுகளை நாட்டுப்புறக்கலைகள் சந்தித்திருக்கின்றன. காற்றைக் கிழிக்கும் அதிர்வுகளாய்*

*அமையும் பறையிசை ஆண்களிடமிருந்து பெண்களின் கைக்கு மாறியதை தற்போது பார்த்து வருகின்றோம். பறையைத் தொட மறுத்த பெண்மையின் மென்மையான கரங்கள், கச்சை கட்டத்தயங்கிய சிவந்த கால்கள், பறையைக் கையிலேந்தி காலில் சலங்கை கட்டி தலையில் கரகம் வைத்து ஆடி வருகின்றனர். அழகுப் பதுமையகளாய் வாழ்ந்த உயர் சாதிப் பெண்களை ஆட்டக்காரிகளாய் மாற்றியது இன்றைய முதலாளித்துவம். நவீன உற்பத்திச் சாதனங்கள் வழியே ஆளை மாற்றி, ஆடை மாற்றி, அடிக்கும் இடத்தை மாற்றி இலாபம் தரும் வணிகப் பொருளாக மேடை ஏற்றி பணம் பார்க்கும் தொழிலாக உயர்சாதியினர் பயன்படுத்தி வருகின்றனர்.*

*கலை என்பது மண்ணோடும் மக்களோடும், இரத்தமும் சதையும் போல இரண்டறக் கலந்தது. கலைகளில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கி தங்களது ஆதிக்கக் கருத்துக்களால் உழைக்கும் மக்களின் கலைகளை அழித்துவிடும் போக்கு இன்று தொடர்கின்றது.*

**கலைகள் பொதுவானவை**

*இன்றைய காலத்தில் என் மகன், மகள் பரதம் ஆடுகிறார்கள், சங்கீதம் பாடுகிறார்கள், வயலின் வாசிக்கிறார்கள், கித்தார் வாசிக்கிறார்கள் என்று பெருமைப்படுகின்ற ஆதிக்கப் பண்பாட்டு நிலைமாறி என் மகனும், மகளும் பறையிசைக்கின்றனர். தலையில் கரகம் வைத்து ஆடுகின்றனர், சிலம்பம் ஆடுகின்றனர், குறவன் குறத்தி ஆட்டம் ஆடுகின்றனர் என்று சொல்லுகின்ற ஒரு சமூக மாற்றம் உருவாக வேண்டும். கலைகள் பொதுவானவை, அனைவருக்கும் தேவையானவை. இக்கலைகளுக்கு சாதி, மதம் சார்ந்த சாயம் பூசுவதின் மூலமாக சமூகத்தில் பிரிவினைகள் உருவாக்கப்படுகின்றன.*

*நாட்டுப்புறக் கலைகள் நாட்டார் தெய்வ வழிபாட்டை அடிப்படையாக கொண்டு உழைக்கும் மக்களின் வாழ்வியல் மற்றும் தொழில் சார்ந்த பண்புகளை வெளிப்படுத்துகின்றது. செவ்வியல் கலைகள் பெருந்தெய்வவழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு இறை சார்ந்த மதிப்பீடுகளை மையப் படுத்துகின்றது.*

**செவ்வியல் கலைகள்**

*செவ்வியல் கலைகளின் ஆட்ட நிகழ்வுகள் பரதம், பாட்டு நிகழ்வுகள், கர்நாடக இசை, இந்துஸ்தானிய இசை என்று அமைகிறது. நாட்டுப்புறக் கலைகளின் ஆட்ட நிகழ்வுகள் கிராமியக் கலைகள், ஆட்டம், பாட்டு, பறையிசை, கூத்து, நாடகம் என்று அமைகிறது. நாட்டுப்புறக் கலைகளில் பறையிசை இன்று கைமாறி முதலாளிகளின் கைகளுக்குச் சென்றதால் அதன் ஆட்ட அடவுகளின் இயல்பான நிலை மாறியிருப்பது இக்கலைஞர்களுக்கு மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.*

**இலக்கியங்களில் பறையிசை வெளிப்பாடுகள்**

*தொன்மையான தமிழ்ச்சமூக வரலாற்றில் 70 வகையான தோலிசை கருவிகளை உருவாக்கி ஐந்திணைகளிலும் வாழ்ந்த தொல்குடிச் சமூக மக்கள் பறையிசை இசைத்துள்ளனர். அதில் 32 வகையான பறையிசைக்கருவிகள் வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு தேவைகளின் அடிப்படையில் பயன்படுத்தியுள்ளனர் என்பதை முனைவர் வளர்மதியின் ஆய்வு நிரூபித்துள்ளது. தொல்காப்பியத்தில் பறைகுறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன.*

**ஐவகை நிலத்தில் பறையிசை வெளிப்பாடுகள்**

*1. குறிஞ்சி நிலத்தில் தொண்டகப்பறை, வெறியாட்டுப்பறை,*
*2. முல்லை நிலத்தில் ஏறு கோட்பறை,*
*3. மருத நிலத்தில் நெல்லரி பறை,*
*4. நெய்தல் நிலத்தில் மீன்கோட்பறை, நாவாய்ப்பறை,*
*5. பாலை நிலத்தில் பூசல் பறை,ஊரெறி பறை,*

*என்கிற பெயர்களில் பறை சிறப்புப் பெற்று இருந்துள்ளது.*

*பறையிசை உழைக்கும் மக்களுக்குரிய ஆட்டக் கருவி, உலகிலேயே தாளக் கருவிகளின் சுதியை அதிகரிக்க நெருப்பைப் பயன்படுத்தும் ஒரே கருவி பறை மட்டுமே அதனால் தான் ஐந்து வகை நிலத்திலும் வாழ்ந்த மக்கள் இப்பறையைப் பயன்படுத்தி வந்துள்ளனர். நம் முன்னோர் வாழ்வில் பயன்படுத்தப்பட்டு வந்த இப்பறையிசையை தீட்டுக் கருவி, அமங்கல ஓசை என்று ஒதுக்கி வைத்தனர். சமூகத்தில் உயர்ந்த நிலையில் பயன்படுத்தபட்டு வந்த பறையிசை இடைப்பட்ட காலத்தில் தாழ்ந்து வீழ்ந்து போனது ஒரு மாபெரும் வரலாற்றுப் பிழை என்றால் அது மிகையாகாது. பறை என்ற சொல்லும், பறை முழக்குவோர் பறையர் என்ற சொல்லும், தாழ்ந்த பொருளைத் தரும் என்று சங்ககாலத்திலும் இல்லை. காப்பியகாலத்திலும் இல்லை.*

**பறையிசை எதிர்ப்பும் - எழுச்சியும்**

*சோழர்களின் ஆட்சிக்காலத்தில் தான் முதன் முதலாக பறையிசையும் அக்கருவியை இசைக்கும் இசைவாணர்களும் இழிவாக கருதப்பட்டனர் என்பதை எண்ணற்ற வரலாற்று ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. சோழர்கள் ஆட்சிக்காலத்தில் தொடங்கிய இந்த இழிவான மனநிலை 17ஆம் நூற்றாண்டில் உச்சநிலையை அடைந்தது. ஆக, உன்னதமான உயர்ந்ததோர் பொருளாகக் கருதப்பட்ட பறையிசைக் கருவியின் சிறப்பை அதன் மகத்துவத்தை சீர்குலைக்கவும் பறையிசையை முழங்கிய இசைவாணர்களை இழிபிறப்பாளர்கள் என்று சித்தரித்து சாதிய சமூகத்தில் கடைக்கோடி மனிதர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக சனாதன சக்திகளால், திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சதிச்செயலாகும். அரசவைகளிலும், போர்க்களங்களிலும் முழங்கிய பறையொலி மெல்ல மெல்ல இடம் பெயர்ந்து சாதி இந்துக்களின் இறப்புச் சடங்குகளிலும், கோயில் விழாக்களிலும் அடிமைத் தொழிலாய் தஞ்சம் புகுந்தது.*

*கடலூர் மாட்டம் காட்டுமன்னார்குடி வட்டாரத்தில் யாரும் பறை அடிக்கக்கூடாது; மற்ற சாதியினருக்கும் அடிக்கப் போகக்கூடாது என்று 1962ஆம் ஆண்டு எல்.இளையப்பெருமாள் தலைமையில் தீர்மானம் போடப்பட்டது. 1985ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் காட்டுமன்னார் குடிக்கு அருகில் குருங்குடி என்னும் கிராமத்தில் தீமிதித்திருவிழா நடந்தது. அதில் உள்ளூர் தலித்துகள் பறையடிக்க வராததால் வெளி மாவட்டத்திலிருந்து பறையடிக்க ஆட்கள் வரவழைக்கப் பட்டிருந்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் குவிந்தனர். காவல் துறை தடுத்தது. தடியடி நடத்தியது. கண்ணீர்ப் புகைக்குண்டு வீசியது. இறுதியாக துப்பாக்கி சூடும் நடத்தியது. துப்பாக்கிச் சூட்டில் கல்லூரி மாணவர் ரெட்டியூர் பாண்டியன் மரணமடைந்தார். அவரது மரணம் மிகப்பெரிய போராட்டமாக மாறியது. பாண்டியனின் தியாகத்தால் கடலூர் மாவட்டத்தில் பறையிசை அடிப்பது முடிவுக்கு வந்தது. 1994 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளம் கிராமத்தில் நிலவிய தீண்டாமையை எதிர்த்துப் பறையிசைக்க மறுத்த குருமூர்த்தி என்பவரின் கட்டைவிரல்கள் சாதிய மனநோயாளிகளால் வெட்டப்பட்டது. இது போன்ற பல்வேறு சம்பவங்கள் தமிழ்நாட்டில் நடந்துள்ளன.*

**பறையிசையின் எழுச்சி**

*1999ஆம் ஆண்டுக்குப் பிறகு புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார், மார்க்சீய சிந்தனையாளர்கள் அரசியலுக்கு வந்த பின்னர் தமிழ்நாடு முழுவதும் மக்களிடையே வீரிய எழுச்சியில் ஆதிக்கச் சக்திகளை அடித்து நொறுக்கும் பேரொலியாக பறையிசை எழுந்தது. அதுவரை எல்லா அரங்குகளிலும், பண்பாட்டு மேடைகளிலும், வெறுத்து ஒதுக்கப்பட்ட பறையிசையை நாட்டுப்புறப் பாடல்களுடன் முதன் முதலில் மேடையேற்றியவர் பேராசிரியர் கே.ஏ.குணசேகரன். இன்று பல தடைகளையும் உடைத்துக் கொண்டு எல்லைகளை மீறி எல்லாத் தடங்களிலும் வெற்றிப்பறையாக ஒலிக்கின்றது.*

*இக்கலை இன்று நவீன நாடக மேடைகளிலும், திரைப்படங்களிலும், பண்டிகைகளிலும் அரசியல் கட்சி மாநாடுகளிலும், திருமணங்களிலும், ஊர்வலங்களிலும் அரசு சார்பில் நடைபெறும் கலை விழாக்களிலும், பிற நாட்டு தேசியக் கலை விழாக்களிலும் என அனைத்து சுப நிகழ்ச்சிகளிலும் இடம் பெறும் அளவிற்கு ஒரு தலைச் சிறந்த நாட்டுப்புறக் கலையாக வளர்ந்து உள்ளது. பறையிசை இல்லாமல் நவீனக்கலைகள் இல்லை என்னும் அளவிற்கு இடம் பெற்றுள்ளது. ஒரு குறிப்பிட்ட பகுதியில், ஒரு குறிப்பிட்ட இனத்தவர்களால் நிகழ்த்தப்படும். இக்கலைகள் கிராமியக்கலைகள், நாட்டுப்புறக் கலைகள், நாட்டார் வழக்காற்றியல் கலைகள் என அழைக்கப்படுகின்றது.*

*தீட்டு, இழிவு, அவமானம், அசிங்கம் என சாதிய மனநோயாளிகளால் முத்திரை குத்தப்பட்டு எங்கெல்லாம் பறையிசை நுழைய மறுக்கப்பட்டதோ, அங்கெல்லாம் இன்று நிகழ்த்த வேண்டிய கட்டாயமும், நிர்ப்பந்தமும் ஏற்பட்டு பறையிசை அதிர்கின்றது.*

**பண்பாட்டுத் துறையில் பறையிசை**

*முதல்வர் மு.க.ஸ்டாலின் 2022-2023 ஆம் நிதியாண்டில் சட்டமன்ற பேரவையின் மானியக் கோரிக்கையின் போது, கலை பண்பாட்டுத்துறை தொடர்பாக தமிழ்நாட்டில் பாரம்பரிய நாட்டுப்புறக் கலைஞர்கள் பங்குபெறும் பிரம்மாண்ட கலைவிழாவினை தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையினையொட்டி சென்னையிலும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடத்த அறிவிப்பும், அதற்கான அரசாணையும் வெளியிட்டார்.*

*அதன் வெளிப்பாடக, நாட்டுப்புறக் கலை வடிவங்களை பொதுமக்களிடையேயும், உலகத்தமிழர்களிடையேயும் கொண்டு செல்லும் நோக்கில் இன்றைய இளம் தலைமுறையினர் செயல்படுகின்றனர். நாட்டுப்புறக் கலைக்கு மிகப்பெரிய அங்கீகாரம் அளிக்கும் வகையில் சென்னையில் “சென்னை சங்கமம். நம்ம ஊரு திருவிழா” என்ற பெயரில் பல்வேறு நாட்டுப்புறக் கலைகள் இடம் பெறும் வகையில் பிரமாண்ட கலை விழாக்கள் தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறையால் நடந்தப்படுகின்றது. அந்த வகையில் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத் திருவிழா நடைபெறுகின்றது. தமிழகத்தில் உள்ள பல்வேறு கலை வடிவங்களை அறிமுகப்படுத்தி, மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும் விதமாகவும், பள்ளிக்கல்வியின் செயல்பாடுகளில் ஒரு பகுதியாக நாட்டுப்புறக்கலையை மாணவர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர். இதில் பறையிசையை அதிக அளவில் பயன்படுத்தியுள்ளனர்.*

**வெளிநாடுகளில் பறையிசை**

*தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இப்பறை வெவ்வேறு பெயர்களில் நடைமுறைப் பயன்பாட்டில் உள்ளது. அமெரிக்கா, லண்டன், சிங்கப்பூர், மலேசியா போன்ற உலக நாடுகளிலும் இப்பறையிசைக் கருவியைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆப்பிரிக்க நாட்டில் இக்கலையை பேசும்பறைகள் எனவும், அது இசைக்கின்ற ஒலி அதிர்வுகள் பறைமொழி எனவும் மேலைநாட்டு அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். மத்திய ஆப்பிரிக்க பாண்டு இன மக்கள் நாங்கள் எப்பொழுதும் பறையை வைத்துக் கொண்டிருப்போம் என்று குறிப்பிடுகின்றனர்.*

*பறையை எடுத்து ஓங்கி அடிப்பவர்களின் கையும், கால் அசைவுகளும், முக பாவங்களும், உடல் வெளிப்படுத்தும் சக்தியும், காண்பவர்களை மகிழ்ச்சியுடன் காணவைக்கின்றது, இரசிக்க வைக்கின்றது, ஆட வைக்கின்றது. மாணவர்களின் கலைத் திறமைகளை வெளிப்படுத்துவதில் இக்கலை விழாக்கள் அமைந்திருக்கின்றது. தமிழக அரசின் இச்செயல்பாடுகள் அனைவராலும் வரவேற்கப்படுகின்றது. தமிழர் திருநாள், உழவர் திருநாள் போன்ற பண்டிகைகளில் அனைத்து ஊர்களிலும் பறையிசை ஒலித்தது. தமிழர்களின் வீரவிளையாட்டாகிய மஞ்சு விரட்டு, ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டுகளிலும் பறையிசை அடித்து விளையாடப்படுகின்றன. பறையிசை இல்லாமல் திருவிழாக்கள், பண்டிகைகள், விளையாட்டுகள் இல்லை என்கிற அளவில் மக்கள் கலைகளில் பறையிசைப் பயன்படுகின்றது. கலையும் இலக்கியமும் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். மனித இனம் இம்மண்ணில் வாழ்ந்து மறைந்ததற்கான ஆதாரமே கலையும், இலக்கியமும் தான். சமூகத்தின் உயிர் துடிப்புகள் கலைகள் அதற்கு வடிவம் கொடுக்கின்றவர்கள் நாட்டுப்புறக் கலைஞர்கள். அந்தக் கலைகளை மாணவர்கள் வழியாக மீட்டு எடுப்பது இன்றையத் தேவையாகும்.*

*இது சாவுக்கான பறையல்ல,*
*வாழ்வுக்கான பறை!*
*இது சாதிக்கான பறையல்ல,*
*சமத்துவத்திற்கான பறை!!*

**பயன்பட்ட நூல்கள்**

1. *முனைவர் க. கேசவன், நாட்டுப்புறவியல் கட்டுரைகள், புதுமைப் பதிப்பகம், 20, மேல சாறைப் பட்டைத் தெரு, திருச்சி, 1987.*
2. *பொன். திருநாவுக்கரசு, பாரதத்தில் கிராமியக்கலைகளின் பரிமாண வளர்ச்சி, தமிழ் மரபு அறக்கட்டளை, 2009.*
3. www.tamilheritage.org